Registered as a News paper in Ceylon விலை சதம் 10




ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14


# ஈழநாடு
THE EELA NADU


தேசிய தினசரி National Tamil Daily
மலர் 9 [1-10-67] இதழ் 302
யாழ்ப்பாணம்பிலவங்கபுரட்டாதி15 ஜ: ஆகிர்26 ஞாயிற்றுக்கிழமை





ராஜ பீடி கம்பெனி; கொழும்பு-1


# தென்கிழக்காசிய கூட்டில் இலங்கை சேரக்கூடாதாம்

## எதிர்க்கட்சிகள் கடுமையான எதிர்ப்பு

கொழும்பு, சனி

இலங்கை தென்கிழக்காசிய நாடுகளின் பொருளாதார கூட்டு அமைப்பில் சேருவதைக் கடுமையாக எதிர்ப்பதாகவும், அப்படி இலங்கை சேருமானால் தாம் பதவிக்கு மீண்டும் வந்தால் அதிலிருந்து உடனடியாக விலக நடவடிக்கை எடுப்பார்கள் என்றும் இன்று எதிர்க்கட்சியினர் விடுத்த ஒரு அறிக்கையில் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த அறிக்கையில் திருமதி பண்டாரநாயகா, டாக்டர் என். எம். பெரேரா, டாக்டர் விக்கிரமசிங்க ஆகியவர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

தென் கிழக்காசிய பொருளாதாரக் கூட்டமைப்பில் இலங்கை சேருவதுபற்றி பிரதிநிதிகள்சபையில் அறிக்கையொன்றை வெளியிட பிரதம மந்திரி அண்மையில் மறுத்து விட்டதைத் தொட

[6-ம் பக்கம் பார்க்க]

## பெற்றோர், ஆசிரியர் மாணவர் அதிருப்தி

### கல்லூரி அதிபர் மாற்றம் பற்றி கல்வி மா அதிகாரிக்கு புகார்

வல்வெட்டித்துறை, சனி

வல்வெட்டித்துறையில் பள்ளிச்சிறார்களின் பெற்றோர்களும், ஆசிரியர்களும் மாணவர்களும் கொதிப்படைந்திருக்கிறார்கள்.

பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினம் தலைமையில் கொழும்பில் கல்வி மா அதிகாரியைபேட்டிகாண்பதற்கு பிரமுகர்கள்கோஷ்டியொன்று கொழும்புக்குப் போகவிருக்கின்றது. நகரபிதா திரு. வி. ரத்தினவடிவேலுவின் தலைமையில் பெற்றோர் ஆசிரியர் கோஷ்டியொன்று வடபகுதி வித்தி

[6-ம் பக்கம் பார்க்க]

## இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல்

### இன்று ஆரம்பமாகும்

கொழும்பு, ஞாயிறு

இலங்கை — இந்திய ஒப்பந்தம் இன்று ஞாயிற்றுக்கிழமைமுதல் அமுலுக்குவரவிருக்கிறது.

குடியேற்ற வெளியேற்றக் கட்டுப்பாட்டதிகாரி திரு, டபிள்யு. ரி. ஜயசிங்கா, உதவி நிரந்தரக் காரியதரிசியாக இன்று பதவியேற்கவிருக்கிறார்.

குடியேற்றம் இலங்கை—இந்திய ஒப்பந்த அமுல், தேசியபதிவு, இலங்கைப் பிரஜாஉரிமை ஆகிய பிரிவுகள் திரு. ஜயசிங்காவின் பொறுப்பிலிருக்கும்.

இப்புதிய பிரிவுகளுக்கு 27 உயர்தர உத்தியோகஸ்தர்களும் 80 குமாஸ்தாக்களும் தெரிவு செய்யப்படவிருக்கிறார்கள்.

## 22 ஆயிரம் பேருக்கு பதவி உயர்வு

கொழும்பு, சனி

அரசாங்க சேவையில் 'காஷுவல்' அடிப்படையில் சேவைபுரிகிறவர்களும், தற்காலிக அடிப்படையில் சேவை செய்கிறவர்களுமான 22 ஆயிரம் பேர் நிரந்தர அடிப்படையில் அமர்த்தப்படவிருக்கிறார்கள்.

'காஷுவல்' அடிப்படையில் 10 வருடகால சேவையில் அமர்ந்தவர்கள் தற்காலிக சேவையிலும் தற்காலிகசேவையில் அமர்ந்தவர்கள் நிரந்தர சேவையிலும் அமர்த்தப்படுவார்கள்.

இத்தகவல் இன்று அரசாங்கம் வெளியிட்ட 'கஸட்' அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.

## சுயபாஷா ஆசிரியர்க்கு அதிபர் பதவி வழங்கவேண்டும்

### இலங்கை தமிழாசிரியர் சங்கத்தினர் கேட்கப்போகிறார்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சுயபாஷா ஆசிரியர்களுக்கு 3-ந்தரஅதிபர் பதவிகள் வட்டாரக் கல்வியதிகாரி பதவிகள் வழங்கப்படவேண்டுமென்றும், கடந்த ஆண்டில் நடைபெற்ற 1-ம் 2-ம் தர தலைமையாசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சையில் தேறியவர்களுக்கு உடனடியாகக் குறித்த நியமனங்களை வழங்குமாறும், மன்னார், முல்லைத்தீவு, வவனியா, நெடுந்தீவு, இரணைதீவு ஆகிய இடங்களிலுள்ள ஆசிரியர்களின் மாற்றக் கோரிக்கையை வெளி மாகாணங்களிலுள்ளவர்களின் நிலைக்குச் சமமாகக் கவனிக்கவேண்டுமென்றும், தமிழ் மாணவர்களின் போதனாமொழி தமிழ்மொழியாகவே இருக்கவேண்டுமென்றும் கோரும் பிரேரணைகள் அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றன. இம்மாதம் 2-ம் திகதி காலை மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் சங்கத்தின் 21-வது ஆண்டுப் பொதுக் கூட்டத்திலேயே இவை சமர்ப்பிக்கப்படவிருக்கின்றன. சங்கத்தலைவர் திரு கந்தையா கூட்டத்துக்குத் தலைமைவகிப்பார். மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராசதுரை, கல்வி கலாச்

[6-ம் பக்கம் பார்க்க]

## ரூ. 2 கோடி 40 லட்சம் கடன் உதவி

### மேற்கு ஜெர்மனி கொடுக்கும்

கொழும்பு, சனி

மேற்கு ஜெர்மனி இலங்கைக்கு 2 கோடி 40 லட்சம் ரூபாய்க்கான கடன் உதவி தருவதற்கான ஒப்பந்தம் ஒன்று கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

இந்தக் கடன் மூலம் இலங்கை கைத்தொழில் உபகரணங்கள் மூலப் பொருட்கள், யந்திரங்கள் போன்றவற்றை வாங்குவதற்கு பயன்படுத்தும்.

## "இரத்தினமும், சண்முகமும் சுட்டதாக சர்மா கூறினார்"

### நாவலர் சந்தி கொலை வழக்கில் முதலாளி மகேந்திரன் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"தெய்வேந்திரம் 3 வருடகாலமாக என் கடையில் வேலை செய்தார். அவர் எனது சொந்தக்காரர். அவருக்கு எதிரிகள் கிடையாது. நல்ல நடத்தையுள்ள ஒரு சிறந்த தொழிலாளி அவர். சம்பவம் நடந்த தினம் வெடிச்சத்தம் கேட்டதும் கடைக்கு ஓடினேன். தெய்வேந்திரம் விழுந்து கிடந்தார். சர்மாவும், குலசிங்கமும் அங்கு நின்றனர்"

நாவலர் சந்திக் கொலை வழக்கில் சாட்சியமளித்த பற்றறிக் கடை முதலாளியான மகேந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு நேற்றுக் காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் வி. மாணிக்கவாசகர் முன்னிலையில் நான்காவது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

விசாரணையைப் பார்ப்பதற்கு பெண்கள் உட்பட நீதிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

இவ்வழக்கில் 1965-ம் ஆண்டு நவம்பர் 8-ந் திகதி யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் 18 வயதான சுப்பிரமணியம், தெய்வேந்திரத்தை சீனு இரத்தினம், நடராசா சுப்பிரமணியம், முருகேசு சண்முகம் ஆகியோர் கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

1-ம் எதிரி சார்பில் அட்வக்கேட் ஏட்லி பெரேரா, புறக்டர் எஸ். செல்லத்துரையின் அனுசரணையுடன் ஆஜரானார். 2-ம் எதிரி சார்பில் அட்வக்கேட் அர

[6-ம் பக்கம் பார்க்க]


சிறந்த அலுமினிய பாத்திரங்களுக்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

'சத்தியம்' என்பது வலுவான ஆயுதம். அதைப் பயன்படுத்துவதற்கு நேரமோ, அறவேகிடையாது. வாழ்க்கையின் ஒவ்வொரு விநாடியும் 'சத்தியம்' மனிதனுடனே இருக்கவேண்டும்.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஹூ புரட்டாதி 15உ 1-10 67)


## சீனாவின் தேசியதினம்

சீனாவின்தேசியதினம் இன்று. பதினெட்டு ஆண்டுகளின் முன் விடுதலையடைந்த சீனம் இன்று பல துறைகளிலும் பெரும் முன்னேற்றமடைந்துள்ளது. ஜனத்தொகையிலும் பரப்பளவிலும் உலகில் மிகப்பெரியநாடான சீனா, விவசாயம், தொழில்களில் மட்டுமல்லாது நவீன விஞ்ஞானத்திலும் முன்னேறியுள்ளது. அதன் வெற்றிகண்டு உலகமே வியக்கிறது. உலகில் பரந்து வாழும் மக்களுடன் சேர்ந்து சீன மக்களுக்கு நாமும் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எந்தத் துறையையும் மேல்நாடுகள் தமக்கேஏக போகமாக்கிக்கொண்டதனால் எதற்கும் மேல்நாடுகளையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நிலையிலேயே ஆசிய-ஆபிரிக்க நாடுகள் பல இன்றும் உள்ளன. ஆசியாவில் மிகப் பெரிய நாடான சீனா இந்த நிலையையே மாற்றி விட்டது. மேற்கு வல்லரசுகள் திகிலடையுமளவுக்கு சீனா பல துறைகளிலும் முன்னேற்றம் பெற்றுள்ளது. சமீபகாலத்தில் ஆசிய-ஆபிரிக்க நாடுகள் பலவற்றுடன் சீனாவின் நட்புறவு சிறிது குலைந்து வந்திருப்பதும், சீனா அணு ஆயுதங்களை உற்பத்தி செய்து வருவதும் சீனாவைக்கண்டு ஆசிய-ஆபிரிக்க நாடுகளே அச்சமடையும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்தநாடுகள் பீதியுடன் சீனாவை சந்தேகக் கண்கொண்டு நோக்குகின்றன. சீனாவின் அரசியல் கொள்கையும்ஆட்சி அமைப்புமுறையும் இலட்சியமும் வேறுபட்டதாக இருப்பினும் வேற்றுமையில் ஒற்றுமைகாணமுடியுமென்பதை சீனாவும்இதர ஆசிய-ஆபிரிக்க நாடுகளும், அவைநடந்து கொள்வதன் மூலம் உலகிற்கு உணர்த்த முடியும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் சீனாவுக்கும் இலங்கைக்கும் அரசியல் கோட்பாட்டில் வேற்றுமை இருப்பினும் இருநாடுகளுக்குமிடையில் நீண்டகால உறவும் தொடர்பும் இருந்து வந்துள்ளது. இலங்கையில் அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டபோது இலங்கைக்கு சீனா அரிசி கொடுத்ததன் மூலம் இந்த உறவும் தொடர்பும் வலுப்பெற்றது. இலங்கைக்கு அரிசி கொடுத்து அதேசமயம் இலங்கையின் ரப்பரையும் வாங்கிவந்ததற்காக இலங்கைமக்கள் சீனாவுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். சில அற்ப காரணங்களுக்காக இலங்கைக்கும் சீனாவுக்குமுள்ள வர்த்தக மற்றும் உறவுகள் சீர்குலைந்து விடக்கூடாது. பெரிய நாடான சீனாவுக்குப் பெரும் பொறுப்புகளும் உள்ளன. அற்ப விஷயங்களை பொருட்படுத்தாமல் இலங்கைஉள்ளிட்டு இதர ஆசிய-ஆபிரிக்க நாடுகளுடன் சீனா பெருந்தன்மையுடன் நடந்து அவைகளுடனுள்ள உறவுகளை வலுப்படுத்திக்கொள்ளுமென்றும் ஆசிய-ஆபிரிக்க நாடுகளின் வலிமைக்கும் ஒற்றுமைக்கும் உலக அமைதிக்கும் சீனா வழிகாட்டுமாயின், உலக மக்களின் நன்றிக்கு அது பாத்திரமாகும்.

## 'ஓடி விளையாடு பாப்பா - நீ ஓய்ந்திருக்க லாகாது பாப்பா!'

என்று பாரதியாரால் அன்புடன் அறிவுறுத்தப்படும் இளம் சிறுவர்களின் மீதுதான் வருங்கால உலகினைச் சீருறச் செய்யும் பெரும் பொறுப்பு சுமத்தப்பட்டிருக்கிறது. அந்தவகையில் அவர்கள் இன்றையத் தலைவர்களை விட மிக முக்கியத்துவம் வாய்ந்தவர்கள். அவர்களுக்கு - இளம் குருத்துகளுக்கு அக்டோபர் மாதம் முதலாம் நாள் ஒரு திருநாள்! உலக சிறுவர் தினம்!!

# விகடன் அவந்தி

குறும்புப் பேச்சுக்கும் கோணல் பதிலுக்கும் சீனாவில் பெயர் பெற்றவன் அவந்தி. சீனத்தின் 'விகட கவி' யான அவந்தியின் கதைகள் குழந்தைகட்கு சிரிப்பை வாரிக் கொடுப்பவை.

### யார் பெரியவர்?

ஒருமுறை விகடன் அவந்தி எங்கோ அவசர அவசரமாகப் போய்க்கொண்டிருந்தபொழுது யாரோ இரண்டு சோம்பேறிகள் அவனை நிறுத்தி ''சூரியனா, சந்திரனா பெரியவன்?'' என்றொரு கேள்வியைப் போட்டார்கள்.

''சந்திரன்தான்''! சடாரென்று அவந்தியிடமிருந்து பதில் வந்தது.

''ஏன் அப்படி நினைக்கிறாய்?'' - சோம்பேறிகளும் விடுவதாக இல்லை.

''இது தெரியாதா? வெளிச்சமுள்ள பகலிலே சூரியன் தோன்றுவதாலே என்ன பயன்? இரவிலே சந்திரன் வராவிட்டால் ஒரே இருட்டு - அமாவாசை போலாகி விடுமல்லவா?'' என்று சொல்லிவிட்டு விறுவிறென்று நடையைக் கட்டினான் அவந்தி.

### கவலை வேண்டாம்

எப்படியாவது அவந்தியை ஒருநாளைக்கு முட்டாளாக்குவதென்று சிலர் திட்டம் தீட்டிக் கொண்டிருந்தார்கள். ஒருநாள்அவந்தியைத் தனியே சந்தித்தவுடன் அவர்களுக்குப் பலத்த மகிழ்ச்சி. ''தெரியுமா அவந்தி விஷயம்?'' என்று ஆரம்பித்து, ''குளத்தில் நெருப்புப் பற்றிக்கொண்டு விட்டதாம், மீன்கள் எல்லாம் சாகப்போகின்றன .... ஏதாவது வழியிருந்தால் சொல்லேன்'' என்று 'பதறினார்கள்'.

''பரவாயில்லை, கவலைப் படாதீர்கள்?'' என்று 'அபயம்' கொடுத்த அவந்தி, ''குளத்தில் நெருப்புப் பிடித்தால் மீன்கள் மரத்தில் ஏறிக்கொள்ளும்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

## 'பொன்எழுத்தில் பொறிக்கவேண்டும்'

யாழ்ப்பாணம், ஞாயிறு ''அமரர் வன்னியசிங்கம் தமிழ்உரிமைகளுக்காகச் செய்த தியாகங்களையும், அன்னாரின் சேவைகளையும் தமிழ் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களில் பொறிக்க வேண்டும்'' என கைதடி தமிழரசுக்கட்சி வாலிபமுன்னணியின் சார்பில் அமரர் வன்னியசிங்கத்தின் நினைவுதினக் கூட்டத்தில் பேசிய வழக்கறிஞர் திரு. மு. ஆலாலசுந்தரம் கூறினார். ஆசிரியர் திரு. வின்சன், பேசுகையில் கட்சி ரீதியாகத்தான் தமிழர் பிரச்னைகளைத் தீர்க்க முடியும் என்றும், தனிப்பட்ட முறையில் அல்ல என்றும் கூறினார். கைதடி வாலிபமுன்னணிச் செயலாளர் திரு. வ. நடராசா, செல்வன் சந்திரமோகன் ஆகியோர் உட்படப் பலர் பேசினர்.

திரு. சுப்பையா கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

## இன்றைய பலன்

1-10-67
ஞாயிற்றுக்கிழமை
(புரட்டாதிமாதம் 15உ)
நட்சத்திரம் - மகம் மாலை 6-47 மேல் பூரம்
திதி-துவாதசி பகல்8-42 மேல திரயோதசி
சுபநேரம்- 9-02-16 32
ராகுகாலம்- 4-32- -02

மேஷம்-சத்தானவாழ்வு முத்தான நிகழ்ச்சி.

ரிஷபம்-நாடியது கிடைக்கும், நல்லெண்ணம் வளரும்.

மிதுனம்-பணவரவுண்டு பணிந்து நட.

கடகம்-போனதுவராது பொறுமையாய் இரு.

சிம்மம்-உடல் நலன் கெடும், உபவாசம் நன்று

கன்னி- பேச்சுவன்மை. பெரும்புகழ்.

துலாம்- போற்ற வரும் கூட்டம் தூற்றவும் செய்யும்.

விருச்சிகம்-முயற்சியால் உயர்ச்சி தனமும்சேரும்.

தனுசு - இதயத்தில் தென்றல், இல்லறச் சிறப்பு.

மகரம்-பக்கத்திலேபகைவர், பாதுகாப்பு வேண்டும்.

கும்பம் - அன்புமழை, ஆனந்த நிலை.

மீனம்- சிரம் தாழ்த்த நேரிடும், சிந்தித்துச்செயலாற்று.

—சோதிடக் கலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

## வடமாகாண ஆசிரியர்கள் அதிருப்தி

யாழ்ப்பாணம், ஞாயிறு முதலாம் தர அதிபர்களாக ஆசிரியர்களுக்கு உயர்வு அளிக்கப்படுவதற்கு மனுப் பத்திரங்கள் கோரப்படுவதற்கு முன் ஒத்துக்கொள்ளப்பட்ட நடைமுறையொன்று வெளிப்படுத்தப் படவில்லையென்றும் இதனால் இந்நியமனங்கள்எந்த அடிப்படையில் செய்யப்பட்டதென்பது அறிய முடியாதிருப்பதாகவும் பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் ஆசிரியர்களுக்கு மிகக் குறைவானதால் இந்நியமன முறையையிட்டு அதிருப்தியடைவதாகவும் முதலாம் தர அதிபர்களாக ஆசிரியர்கள் உயர்வு பெற்றதையிட்டு வடமாகாண ஆசிரியர் சங்கம் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளது.

உத்தியோகஸ்தர்களை மட்டும் கொண்ட தெரிவுக்குழு ஆசிரியர்களின் திறமைகளை மட்டிட முடியாதெனவும் எத்தத் தெரிவுக்குழுவிலும் ஆசிரியர் சங்கப்பிரதிநிதிகளும் இடம்பெற வேண்டுமென்றும் எல்லாவகையிலும் தகுதி வாய்ந்த சிலர் இப்பதவிகளுக்குத் தெரிவு செய்யப்படவில்லையெனவும், கல்வி நலன் கருதி இத் தவறுகள் நிவர்த்திசெய்யபடவேண்டுமென்றும் மேலும் அவ்வறிக்கையில்கூறப்பட்டுள்ளது

## பஸ்தொழிலாளர் சங்ககிளை ஜி.ஜி.இன்று திறந்து வைப்பார்

யாழ்ப்பாணம், ஞாயிறு ஐக்கிய இலங்கைபோக்குவரத்துச்சபை தொழிலாளர் சங்கத்தின் கோண்டாவில் கிளை கோண்டாவில் மத்திய பஸ் டிப்போவுக்கு அருகாமையிலுள்ள நிலையத்தில் இன்று பிற்பகல் மேற்படி சங்கததலைவரும் யாழ்ப்பாண எம்.பி.யுமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இவ்வைபவத்தில் திரு. என்.ரி. சிவஞானம், திரு ரி.சங்கரப்பிள்ளை, திரு. எஸ். [illegible] திரு. என். [illegible] கோபாலகிருஷ்ணன் ஆகியோர் பேசுவார்கள். (வி.நி)

# ஐயாறன் எழுதுகிறார்

கொக்குவிலிலிருந்து ஓர் அன்பர் எழுதியுள்ள ஒரு கடிதத்தில், சென்ற 27-ந் திகதி பொடி போடும் பழக்கம்கொண்ட ஓர் அன்பர் தெரிவித்த ''ஒரு நல்ல செய்தி''யைத் தாம் படித்துவிட்டு நல்ல பயன் அடைந்துள்ளதாக மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றார்.

''எனக்கு 63 வயதாகிறது. சுருட்டுப் புகைக்கும் பழக்கம் எனக்கு நெடுங்காலமாக இருந்துவந்தது. அன்று 'ஐயாற'னில் செய்தியைப் படித்தபின் அந்த அன்பரின் வழியைப் பின்பற்றி அன்றுவரை வைத்திருந்த சுருட்டு ரின்னை உடனடியாகக் காலியாக்கி சுத்தம்செய்து அதில் என்னிடமிருந்த கதிர்காம விபூதியை நிரப்பிவைத்து, சுருட்டுப் புகைக்க மனம், அவாக் கொள்ளும்போது, ரின்னிலுள்ள விபூதியை எடுத்து ''சிவசிவ'' என்றும் 'முருகா' என்றும் சொல்லி அணிந்து வருகிறேன். சுருட்டுப் புகைக்கும் அவா இதற்கிடையிலே எவ்வளவோ குறைந்துவிட்டது. இன்னும் இரண்டொருநாளில் அது அறவே நின்றுவிடுமென்று நம்பிக்கையுண்டு. அதோடு சுருட்டுப் புகைக்கும் வழக்கத்தை மறந்தேவிடுவேன். அந்த அன்பரின் ''நல்ல செய்தி'' மற்றும் பலருக்கும் பயன்படுமென்றே நம்புகிறேன். எனது பெயரைக் குறிப்பிடாதுவிடும்படி தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்'' என்று கூறி பெயர் விலாசம் எல்லாம் எழுதி இருக்கிறார்.

ஃ ஃ ஃ

இதை மற்றொருஅன்பரிடம் படித்துக் காட்டியபோது, நமக்குப் பல காலமாகப் புகைக்கும் பழக்கம் இருந்ததாயும் ஒரு மாதத்தில் 25 டின் சிகரெட் புகைத்து வந்ததாயும் தொண்டையில் நோய் ஏற்பட்டு, சிகிச்சைசெய்து கொண்டதில் டாக்டரின் யோசனைப்படி புகைப்பதை விட்டு விட்டு அதற்கு பதில் பொடி போடுவதைக் கைக்கொண்டதாயும், அன்று ஐயாறனைப் படித்துவிட்டு, தமது வீட்டார், பொடியையும் ஏன் நிறுத்திவிடக்கூடாதென்று கேட்டதாகவும் சொன்னார்.

சின்ன வயதில் ஏற்படும் இவ்வித பழக்கங்களை விடுவதென்பது சுலபமன்று. ஆனால் உடல் கெட்டு உயிருக்கே ஆபத்து ஏற்படுமென்று டாக்டர்கள் கூறும்போது, பலர் இப் பழக்கங்களை மாற்றிக்கொள்வதைப் பார்க்கின்றோம். இப் பழக்கங்களை படிப்படியாக விடுவதென்பது முடியாதென்றும் உடனடியாக ஒரே அடியில் விட்டுவிட வேண்டுமென்றும் அவர் தெரிவிக்கிறார். எப்படியோ இங்கு எழுதுவதை சிலராவது படித்துப் பயனடைவதைக் கேட்க மகிழ்ச்சியாகவுள்ளது.

ஃ ஃ ஃ

இலங்கைக்கு வந்திருந்த கிருஷ்ணமேனனைப் பார்த்தால் அசைப்பில் நமது 'ரிலிஜியஸ்டைஜஸ்ட்' ஆசிரியர் ராமச்சந்திராவைப் போலிருந்ததாக அன்று எழுதினேனல்லவா? உலகிலே பல நாடுகளுக்கும் ஆசிரியர் சென்றிருக்கையில் இவ்விதமே பல இடங்களில் அவரை மேனன் என்றே நினைத்து ஆள் மாறாட்டம் நடந்த சில ருசியான அனுபவங்களைக் கேள்விப்பட்டேன்.

(4-ம் கலம் பார்க்க)

[5-ம் கலத்தொடர்ச்சி]

1958-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் ஹாங்காங்கிலே ஓர் ஒட்டல் பூங்காவில் ஆசிரியர் ராமச்சந்திரா நடந்து செல்லுகையில் பின்னால் அவசரமாக யாரோ நடந்து வரும் சத்தம் கேட்டதாம். திரும்பிப் பார்க்கையில் ஓர் அமெரிக்கப் பெண்மணி, புன்னகை பூத்துக்கொண்டு, ''எப்போது இங்கு வந்தீர்கள்? இனி எங்கு செல்லப் போகிறீர்கள்?'' என்று கேட்டதும் ஆசிரியருக்கு ஒன்றும் புரியாமல், இக் கேள்விகளுக்குப் பதிலளித்தாராம். குரல்வேற்றுமையை அப் பெண்மணி உணர்ந்து, தாம் மேனன் என்று தவறாக நினைத்துப் பேசியதாகவும் தன்னை மன்னிக்க வேண்டுமென்றும் மேனன் நியூயோர்க்கிலே தமது வீட்டில் விருந்தாளியாக இருந்ததாயும் தெரிவித்தாராம். இன்னும் இதேபோல் சில இடங்களில் ஏற்பட்டதாம்.

கொழும்பில் ஒரு சிங்களப் பெண் மேனனின் பல படங்களையும் ஆங்கிலப்பத்திரிகைகளில் பார்த்துவிட்டு நமது இராமச்சந்திராவைப் போலவே அவர் இருந்தாலும், அவரது முகத்தில் ஆசிரியர் முகத்திலுள்ள அருளும், அமைதியும் இல்லையென்று குறிப்பிட்டாராம். மிகவும் சரி. எனக்கும் அது பட்டாலும் அன்று எழுதாமல் விட்டேன்.

அரசியல் வாதிகள் உலகப் புகழ் பெற்றிருக்கலாம். ஆனால் ஆத்மஞானிகளைப் போன்ற அமைதியும் அருளும் அவர்களுக்கு வருவது சுலபமா?

ஃ ஃ

காமியம் செய்து
காலங்கழிக்காதே
ஓமியஞ் செய்தங்
குள்ளத் துணர்மினோ
சாமி யோடு
சரச்சுவதி யவள்
சோமி யும்உறை
யுங்குட மூக்கிலே,

— அப்பர் சுவாமிகள்

[ஆசைகளால் தூண்டப்பட்டு காரியங்களை வாளா செய்து காலம் கழிக்காமல், வேள்விகள் பலசெய்து ஐம்புலவேடரை அடக்கி, தன் கணவனாகிய பிரம்மனோடு சரஸ்வதியும், கோதாவரியும், உறையும் திருக்குடமூக்குப் பெருமானை உள்ளத்தே உணர்வீர்களாக.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வியட்னமில் சமாதானம் நிலை நாட்டுவதானால் ஹனேய் பேச்சுவார்த்தைக்கிசைய வேண்டும்'

## அப்படியானல் அமெரிக்கா விமான தாக்குதலை நிறுத்துமென்கிறார் ஜோன்சன்

### யூ தாண்டுக்கு பாப்பரசர் கடிதம்

வாஷிங்டன், செப்டம்பர் 30

வியட்னம் போருக்கு ஒரு முடிவு காணுமுகமாக வடவியட்னம் சமாதானப்பேச்சு வார்த்தைகளுக்கு உடன்படாத வரை, வியட்னமில் நடைபெறும் போர் தொடரும் என அமெரிக்க ஜனதிபதி திரு ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

வடவியட்னம் மீதான விமான, கடற்படைத் தாக்குதலை அமெரிக்கா நிறுத்துவதானல், வடவியட்னம் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு இணக்கம் தெரிவிக்கவேண்டியது அவசியமாகுமெனத் திரு. ஜோன்சன் தெரிவித்தார்.

வியட்னமில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கென தாம், வடவியட்னம் ஜனதிபதி திரு. ஹோ சி மின்னுடன் உடனடியாகப் பேசுவதற்குத் தயாரகவிருப்பதாகவும் ஜனதிபதி ஜோன்சன் கூறினர்.

அமெரிக்காவின் ராஜ்யங்களனைத்தினதும் சட்ட சபைகளைச் சேர்ந்த சம்மேளனத்தில், 2000 அங்கத்தவர்களுக்குமதிகமானேரிடையே பேசுகையிலேயே ஜனதிபதி ஜோன்சன் இவ்வாறு கூறினர்.



வியட்னம் போர் அரங்கில் அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் வெற்றியடைந்து வருவதாகக் குறிப்பிட்ட ஜோன்சன், அமெரிக்கா சமர்ப்பித்த பலசமாதானத் திட்டங்களையும் ஹனேய் இதுவரை ஏற்க மறுத்துவந்துள்ளதாகவும் கூறினர்.

### 'ஹனேயின் விருப்பமே'

ஹனேயின் விருப்பத்தினலேயே அன்றி, அமெரிக்காவினதோ அல்லது உலகத்தினதோ விருப்பத்தினலல்ல. இந்தப் போர் வியட்னமில் நடைபெறுகிறது' என்றார் திரு. ஜோன்சன்.

வட வியட்னம் வெளியுறவு மந்திரியைச் சந்திக்க, அமெரிக்க ராஜாங்க வெளியுறவு மந்திரி திரு. டீன் ரஸ்க்கையோ அல்லது வட வியட்னமின் விசேஷ பிரதிநிதி எவரையும் சந்திக்க, அமெரிக்காவின் ஒரு விசேஷ பிரதிநிதியையோ, பூமியின் எவ்விடத்துக்கும் அனுப்ப அமெரிக்கா தயாராகவிருப்

[5-ம் பக்கம் பார்க்க]

## இந்திய பத்திரிகையாளர் எதிர்ப்பு தினம்

புதுடில்லி, செப். 30

இந்தியா முழுவதும், பத்திரிகையாளர்கள் நேற்று 'எதிர்ப்பு தினம்' அனுஷ்டித்தனர்.

சம்பள நிர்ணய சபையின் சிபார்சுகளை எதிர்த்தே பத்திரிகையாளர்கள் இத் தினத்தை அனுஷ்டித்தனர்.

புதுடில்லியில், ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடைபெற்றன.

மத்திய தொழில் மந்திரி திரு. ஜெய் சுக்கிலால் ஹாத்தி, பத்திரிகையாளர்களின் குறைகள் பற்றி ஆராய, எதிர்வரும் 7ந்திகதி ஒரு முக்கோண மாநாட்டை நடத்த உத்தேசம் தெரிவித்துள்ளார். இம் மாநாட்டில் சம்பளநிர்ணயசபைப் பிரதிநிதிகளையும் பத்திரிகையாளர்களையும் மந்திரி சந்திப்பார்.

## மே. ஆசியாவுக்கு ஆயுத உதவி அளிப்பதென இரகசிய ஒப்பந்தம்

### ரஷ்யாவும் அமெரிக்காவும் மறுப்பு

வாஷிங்டன், செப். 30

மேற்கு ஆசியாவுக்கு. ஓர் எல்லைக்குட்பட அளவில், ஆயுதங்களை விநியோகம் செய்வதென ரஷ்யாவும் அமெரிக்காவும் ஓர் இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதாக வெளிவந்துள்ள செய்திகளை இரு நாடுகளும் மறுத்துள்ளன.

அண்மையில், அமெரிக்க ராஜாங்கவெளியுறவு மந்திரி திரு. டீன்ரஸ்க்கும், ரஷ்ய வெளியுறவு மந்திரி திரு. குரோமிக்கோவும் சந்தித்த போது. இரு நாடுகளும் இத்தகைய ஓர் உடன்படிக்கைக்கு வந்ததாக வாஷிங்டன் பத்திரிகைகளில் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன.

அப்படி ஓர் உடன்படிக்கையும் செய்யப்படவில்லை என அமெரிக்க ராஜாங்க இலாகா மறுத்துள்ளது. 'இதூ வெறும் புனைகதை' என்று ரஷ்யப் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

__இந்திய உப கண்டத்தில்__

## ஆயுத சமபலமின்மை பற்றிய அயூப் கருத்து

### நியாயமில்லை என்கிறது இந்தியா

புதுடில்லி; செப்.30

இந்திய உபகண்டத்தில் ஆயுத சமபலமின்மை பற்றி மாஸ்கோவில் பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கான் குறிப்பிட்டிருப்பதையிட்டு புதுடில்லியில் இந்திய அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் வெளியிட்டுள்ள கருத்தில், இந்தியாவையும் பாகிஸ்தானையும் ஒன்றுசேர்த்து ஒப்பு நோக்குவது நியாயமல்ல எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு நாட்டின் ஆயுதபலம் பற்றிவிமர்சிக்கையில், அதன் விஸ்திரணம், ஜனத்தொகை அந்த நாட்டுக்கு ஏற்பட்டுள்ள வெளி ஆபத்து ஆகிய அம்சங்கள் கருத்தில் எடுக்கப்படவேண்டியது அவசியமாகுமென அப்பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

### பாகிஸ்தான்நிலை

இந்தியாவும், பாகிஸதானும், தமது நாடுகளின் ஆயுதக்குறைப்புப்பற்றிச் சந்தித்து ப பேச்சுவார்த்தைகள் நடத்தவேண்டுமென முன்னர் இந்தியா ஆலோசனை தெரிவித்தபோது, காஷ்மீர் பிரச்னையும் அதனுடன் இணைக்கப்பட வேண்டுமென பாகிஸ்தான் வலியுறுத்தியதை இந்திய அரசாங்கப் பேச்சாளர் நினைவூட்டினர்.

### உறவுகளைப் பாதிக்காது

பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கானின் ரஷ்ய விஜயத்தினல் இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கு மிடையேயான உறவுகள் எவ்வகையிலும் பாதிக்கப்படுமென்று அஞ்சவேண்டியதில்லையென்றும் அவர் குறிப்பிட்டார்.

பாகிஸ்தானுடன் தான் மேற்கொள்ளும் உறவுகள் எதுவும், இந்தியாவுடனன தனது உறவுகளைப் பாதிக்காது என ரஷ்யாபல தடவைகள் இந்தியாவுக்கு உறுதியளித்திருப்பதாகவும் அந்தப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## விசாகப்பட்டினத்தில் பொலீஸ் துப்பாக்கிப் பிரயோகம்

### ஒரு மாணவர் மாண்டார்

விசாகப்பட்டினம், செப். 30

விசாகப் பட்டினத்தில், மாணவ ஆர்ப்பாட்டக்காரர் மீது பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் ஒரு மாணவர் உயிரிழந்தார்.

கைத்தொழில்பயிற்சி நிலையத்தின் மாணவர்கள், வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். நேற்று அவர்கள் பொலிசார் மீது கற்களை வீசியபோது அவர்களைக் கலைக்கப் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அப்போதே, இந்த மாணவர் கொல்லப்பட்டார்.

கைத்தொழில்பயிற்சி நிலையத்தின் அதிபர், பொலிசாரின் நடவடிக்கையைக் குறைகூறியுள்ளார்.

## அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு கடன்வசதி

ரியோடிஜெனேரோ, செப்டம்பர் 30

நேற்று இங்கு முடிவுற்ற சர்வதேச நிதி ஸ்தாபனக் கூட்டத்தில், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு இலகுவான முறையில் கடன் வழங்குவதற்கு வழிசெய்யும் திட்டத்தை ஸ்தாபனம் ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

இத்திட்டம், பிரிட்டிஷ் நிதிமந்திரியினல் சமர்ப்பிக்கப்பட்டதாகும். இதற்குப் பல நாடுகளும் தமது ஆதரவைத் தெரிவித்திருந்தன.

### மத்திய கடன் நிதி

இத்திட்டத்தின் பிரகாரம் ஒரு மத்திய கடன் நிதியைச் சர்வதேச நிதி ஸ்தாபனம் அமைக்கும். இதிலிருந்து, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள், இலகுவான தவணை முறையில் நீண்டகாலக் கடனுதவி பெறமுடியும்.

'இப்போது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் இத்திட்டம் ஒரு பெரிய சதானையாகும்' என்று பிரிட்டிஷ் நிதி மந்திரி குறிப்பிட்டுள்ளார்.

### உலக வங்கி தலைவர் கருத்து

ரியோடி ஜெனேரோவில் நேற்றி முடிவுற்ற உலக வங்கிக் கூட்டத்தில் பேசிய உலக வங்கித் தலைவர் திரு. ஜோர்ஜ் வூட்ஸ். வளமுள்ள நாடுகளை அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு அதிக பொருளுதவி செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

இந்த நோக்கத்துடன், இன்னும் 3 ஆண்டுகளில், அமெரிக்கா 240 கோடி டாலர் தர முன்வந்துள்ளதாக திரு. வூட்ஸ் தெரிவித்தார்.

——

## வெள்ளஅகதிகள் திரும்புகின்றனர்

பட்ன, செப். 30

அண்மையில் பட்னவில் ஏற்பட்ட பெருவெள்ளம் காரணமாக, அங்கிருந்து குடிபெயர்ந்த மக்கள், இப்போது திரும்பித் தமது இல்லங்களுக்கு வரத் தொடங்கிவிட்டனர்.

——

__நைஜீரியா__

## சமஷ்டி துருப்புகள் முன்னேறுகின்றன

லாகோஸ், செப். 30

நைஜீரிய சமஷ்டித் துருப்புகள், பிரிவினை 'பியாக்ரா'வின் தலைநகரான எனுகுவை நோக்கி முன்னேறிச் செல்வதாகக் கூறப்படுகிறது.

எனுகுவிலிருந்து தனது தலைமைக் காரியாலயத்தை, 'பியாவ்ரா' இராணுவத்தளபதி கேர்ணல் ஒஜுக்கு, தெற்கே 125 மைல் தூரத்திலுள்ள ஓர் இடத்துக்கு மாற்றியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## "அரபு பிராந்தியங்களிலிருந்து இஸ்ரேல் வெளியேற வேண்டும்"

### ஐ. நா. பொதுச் சபையில் ஐ.அ.கு. வெளியுறவு மந்திரி

நியுயோர்க், செப். 30

மேற்கு ஆசியாவில் இஸ்ரேல் கைப்பற்றியுள்ள அரபுப் பிராந்தியங்களிலிருந்து இஸ்ரேல் வெளியேற வேண்டுமெனவும், அரபு நாடுகளுக்கு இஸ்ரேல் நஷ்டஈடு அளிக்கவேண்டும் எனவும் ஐ. அ. கு. வெளியுறவு மந்திரி டாக்டர் முகம்மது ரியாத், நேற்று ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்தில் கேட்டுக்கொண்டார்.

ஐ. நா. சபையில், மேற்கு ஆசியா மீதான பொதுக் கொள்கை விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகை [illegible] இவ்வாறு தெரிவித்தார்.

மேற்கு ஆசியாவில் சமாதானம்ஏற்படுத்துவதானல், அது 1948-ல் ஏற்பட்ட அரபு—இஸ்ரேல் போர் நிறுத்த உடன்படிக்கையின் அடிப்படையிலேயே அமைய வேண்டுமெனவும் டாக்டர் ரியாத் கூறினர்.

### அமெரிக்கா மீது குற்றச்சாட்டு

மேற்கு ஆசியப் போரில் அமெரிக்கா தனது நடுநிலைமைக் கொள்கையினின்றும் பிறழ்ந்துவிட்டதாகவும், அரபுநாடுகளுக்கெதிராக இஸ்ரேலுக்கு அதிக உதவி புரிந்ததாகவும் ஐ. அ. கு. வெளியுறவுமந்திரி டாக்டர் ரியாத் குற்றம்சாட்டினர்.

### இஸ்ரேலின் நோக்கம்

அரபுநாடுகளுடன் இஸ்ரேல் நேரடிப் பேச்சுவார்த்தைகள் நடத்த முயல்வதன் நோக்கம், தனது ஆக்கிரமிப்பு, விஸ்தரிப்புக் கொள்கையை அரபுநாடுகள் ஏற்கச்செய்வதற்கேகும் என்றும் டாக்டர் ரியாத் கூறினர்.

### கோல்ட்பேர்க் பதில்!

டாக்டர் ரியாத்தின் பேச்சுக்குப் பதிலளிக்கையில், அவரது குற்றச்சாட்டை அமெரிக்கப் பிரதிநிதி திரு. கோல்ட்பேர்க் மறுத்தார்.

உண்மையில் இஸ்ரேலுக்கு அளித்திருக்கும் உதவிகளைவிடக்கூடிய அளவில் அமெரிக்கா அரபுநாடுகளுக்கு உதவியளித்திருப்பதாக திரு. கோல்ட் பேர்க் தெரிவித்தார்.

மற்றநாடுகளின் வாழும் உரிமையை அரபுநாடுகள் மதிக்கவேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் பெற வசதியிருந்தும் விவசாயிகளுக்கு ஒரு பிரச்னை

அராலி, சனி

கமத்தொழில் ஆணையாளரால் சென்றமாதம் 31-ந் திகதியிலிருந்து விவசாயிகளுக்கு உணவு உற்பத்திக்கென ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் 4 வீத வட்டிக்கு கடன் வழங்கப்பட்டு வந்தது. இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் இக்கடன் வங்கிகள் மூலம் கொடுக்கப்படுகின்றன. வங்கி சங்கங்களுக்கு எட்டு வீதம் வட்டிக்கும், சங்கங்கள் விவசாயிகளுக்கு பன்னிரண்டு வீதம் வட்டிக்கும் கடன் கொடுக்கின்றன. விவசாயிகள் உயர்ந்த வீத வட்டிக்குக்கடன்பெற்றுவிவசாயத்தில் முதலிடத் தயங்குவதால் பல சங்கங்கள் வங்கிக் கடனுக்கு மனுச் செய்யவில்லை. எதிர்வரும் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையாரின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் வட்டிவீதத்தை முன்போல் நாலாகக் குறைக்கவேண்டுமென்ற ஒரு பிரேரணையை ஆலோசனைக்குவிட இங்குள்ள கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகிகள் ஒன்றுகூடி ஆலோசிக்கத்திட்டமிட்டுள்ளனர்.

## நெசவு உரிமையாளர் சங்கம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தனிப்பட்ட முறையில் நெசவுத் தொழில் செய்பவர்களால் உருவாக்கப்பட்ட யாழ். நெசவு உரிமையாளர் சங்கத்தின் அங்குரார்ப்பணக்கூட்டம் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்றது.

நெசவுக்குத் தேவையான நூலைப் பெறுவதிலுள்ள கஷ்டங்கள், உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதிலுள்ள கஷ்டங்கள் ஆகியன பற்றி இங்கு ஆராயப்பட்டது. நிர்வாகிகள் தெரிவில் தலைவராக எஸ். சண்முகநாதனும், செயலாளராக எம். எஸ். குணராஜாவும், பொருளாளராக திரு. அன்ரனும் தெரியப்பட்டதோடு, 11 பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரியப்பட்டது. [ந.நி]

## படுகாயம் விளைவித்ததாக வழக்கு

காங்கேசன்துறை, சனி

குரும்பசிட்டியைச் சேர்ந்த சின்னவன் கணபதி என்பவருக்கு வெட்டி படுகாயம் விளைவித்ததாக அதே ஊரைச் சேர்ந்த வி. ஐயாத்துரை என்பவர் மீது சுன்னாகம் பொலிசாரால் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரி வி. ஐயாத்துரை தனக்கு தகுந்த சாட்சியம் ஒன்று இக்கோர்ட்டில் இருக்கிறது. அவருக்குச் சம்பவம் எல்லாம் தெரியும் பிரபு'' என்று மாஜிஸ்டிரேட்டிடம் விண்ணப்பித்தார்.

மாஜிஸ்டிரேட்டின் உத்தரவுடன் எதிரியின் சார்பில் வழக்காளியான சின்னவன் கணபதியின் சகோதரியான சின்னவன் லட்சுமி எதிரிக்குச் சார்பாகசாட்சியமளித்தார். மேல் விசாரணையை மாஜிஸ்டிரேட் அடுத்த மாதம் 2-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## காரியாதிகாரி பார்வையிட்டார்

ஊர்காவற்றுறை, சனி

சரவணை நாற்சந்திக்கு அருகாமையில் உள்ள கடற்பாலம் உடைந்துள்ளதால் மாரி காலங்களில் கடல் நீர் நன்னீர்ப் பகுதிக்குள் புகுந்து விடுகிறது. இதனால் அணைக் கட்டுத்திட்டம் வெற்றி பெற மாட்டாது என சரவணை சன சமூக நிலையம், பாரதி சன சமூக நிலையம் என்பன மேலதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்ததைத் தொடர்ந்து தீவுப்பகுதி காரியாதிகாரி திரு. விநாயகலிங்கம் சம்பந்தப்பட்ட அணைக்கட்டுப் பாலத்தைப் பார்வையிட்டுச் சென்றுள்ளார்.

## கட்டிடவேலை

ஊர்காவற்றுறை, சனி

சரவணைக் கிராமமுன்னேற்றச் சங்க மண்டபத்தில் பூர்த்தியாகாமலிருந்த ஒரு பகுதி வேலையைச் சரவணை சனசமூக நிலையம் இப்போது பூர்த்தியாக்கியுள்ளது. மீதி வேலையை அடுத்த நிதிவருடத்தில் பூர்த்தி செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## அரசாங்கத்தை பாராட்டுகிறார் உடுவில் எம்.பி

குரும்பசிட்டி, சனி

''தமிழ்ப் பகுதிகளின் கல்வி, சுகாதார, போக்குவரத்துத் துறைகளில் முன்னேற்றம் பெறவும், அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்து வைப்பதிலும் தேசிய அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதால் தமிழ் மக்கள் அரசாங்கத்திற்குத் தமது பாராட்டுக்களைத் தெரிவிக்க வேண்டும்.''

ஏழாலை அரசாங்க மத்திய வைத்தியசாலையை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் மேற்கண்டவாறு கூறினார். இப் புதிய திறப்பு விழா வைபவத்தில் வடமாகாண சுகாதார சேவை அதிகாரி டாக்டர் எஸ். இராசரத்தினம், வலிவடக்கு காரியாதிகாரி திரு. பீ. எல். பற்றிக்ஸ், ஏழாலை கிராமசபைத் தலைவர் திரு. கே. சிவகுரு ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், சனி

நல்லூரைச் சேர்ந்த இரத்தினம் தங்கராசா என்பவர் அரியாலையைச் சேர்ந்த நவரத்தினம் என்பவர் வீட்டில் திருடமுயன்றதாக யாழ்ப்பாணம் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நேற்றுக்காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ஜமீல் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரி சார்பில் புறக்டர் ஏ. அன்ரனி ஆஜரானார். விசாரணையின் பின் மாஜிஸ்திரேட் எதிரியை விடுதலை செய்தார்.

## வருடாந்தவிழா

இமையாணன், சனி

யாழ்ப்பாண அத்தியட்ச ஆதீன தென் இந்திய திருச்சபையின் வருடாந்தவிழா வட்டுக்கோட்டையில் நடைபெற்றன. இவ்விழாவில் பகிரங்கக் கூட்டம், வலைப் பந்தாட்டம் போன்ற நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.


கட்டிட ஒப்பந்தக்காரர்களுக்கு

**ஓர் நற்செய்தி**

எங்களிடம் குறைந்த செலவில் சிறந்த முறையில் கட்டிடமேல் கூரை இரும்பு வேலைகள், இரும்பு கேட், கிரில்கள், பைப்பிட்டிங், வாட்டர்டேங் [நீர்த்தாங்கி] வெல்டிங், வார்ப்பு வேலைகள், கூரைசீட், ஆணி முதலியவைகள் உடனுக்குடன் குறிப்பிட்ட தவணைக்குள் செய்து கொடுக்கப்படும்.

ஒருமுறை நேரில் எங்களிடம் தொடர்பு கொண்டு உங்களின் ஆதரவை நல்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.



மகா ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்

அன் சிலோன் இன்டஸ்றியல் இன்ஜினியரிங் வேக்ஸ்

150, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**இளம் பற்களை உரமாக வளரச் செய்யவும்**



**உறுதியான ஆரோக்கிய ஈறுகளுக்கும் உரமான வெண்ணிறப் பற்களுக்கும்**

என்றும் பாவியுங்கள்

**போர்ஹான்ஸ்**

பற்பசை





புகழ்பெற்ற பல் வைத்தியர் ஒருவரின் தனித் தயாரிப்பு முறைக்கு தயாரிக்கப்பட்டது. இதில் ஈறுகளை காக்கும் விசேட மருந்துகள் சேர்க்கப்பட்டுள்ளது.

**பெரும்பாலான பற்கள் ஈறு வியாதிகளினால் இழக்கப்படுகின்றன**

அரைவாசிக்கு மேற்பட்ட சிறுவர்களும் கிட்டத்தட்ட எல்லா இளைஞர்களும் ஈறு அழுகல் காரணமாக தமது பற்களை இழக்கின்றனர் என உலகச் சுகாதார நிபுணர்கள் ஒத்துக்கொள்ளுகின்றனர். பெரும்பாலான பற்கள் அழுகியல்ல ஆனால் இவ ஈறு வியாதியினாலேயே இழக்கப்படுகின்றன என இவர்கள் கூறுகின்றனர்.

உறுதியான ஆரோக்கியமுள்ள ஈறுகளிலிருந்தே சிறுவர்களுக்கு உரமான வெண்ணிறப் பற்கள் வளரும். தினமும் போர்ஹான்ஸ் கொண்டு ஈறுகளைத் தேய்த்து பல் துலக்குவதால் ஈறுகள் உரமாகவும் உறுதியாகவும் வளரும். அத்தோடு, பற்களும் சுத்தமாயும் வெண்மையாயும் இருக்கும்.

இளமையில் நன்முறையில கவனியாது விட்டபடியால்தான் பெரும்பாலான இளைஞர்கள் ஈறுவியாதிகளினால் துன்பப்படுகின்றனர். இதற்கு தினமும் போர்ஹான்ஸ் பற்பசை கொண்டு பல்துலக்குதல் அவசியம். இதனால் அவர்களது ஈறுகள் உறுதியாவதோடு பற்களும் வெண்மையாகவும் சுத்தமாகவும் இருக்கும்.

**ஒரு பல்வைத்தியரின் குறிப்புக்குத் தயாரிக்கப்பட்டது போர்ஹான்ஸ்**

புகழ் பெற்ற பல் வைத்தியரான டாக்டர் ஆர். ஜே. போர்ஹான்ஸ் டி. டி. எஸ். அவர்களின் தயாரிப்பு முறைக்கு ஈறுகளை பாதுகாக்கவல்ல விசேட மருந்துகளை கலந்து தயாரிக்கப்பட்டது.

பொங்கும் நுரையினால் பற்களை உரமாயும் வெண்மையாயுமோ, ஈறுகளை உறுதியாயும் ஆரோக்கியமாயுமோ வைத்திருக்க முடியாது. ஈறுகளைத் தேய்த்து பற்களைச் சுத்தஞ் செய்ய போர்ஹான்ஸ் போன்ற ஒரு விசேட தயாரிப்பு முறை அவசியம்.

ஆரோக்கியமான ஈறுகளிலிருந்தே உரமான பற்கள் வளரும். ஈறுகள் எவ்வளவு காலத்திற்கு உறுதியாயும் ஆரோக்கியமாயும் இருக்கின்றனவோ அவ்வளவு காலத் [illegible] போர்ஹான்ஸ் பாவிப்பது ஆரோக்கியமான [illegible] முள்ள ஈறுகளில் உரமான வெண்ணிறப் பற்களை வளரும்.

**உரம் பற்களை என்றும் இளமையுடன் காக்கவும்**



**உறுதியான ஆரோக்கிய ஈறுகளுக்கும் உரமான வெண்ணிறப் பற்களுக்கும்**

என்றும் பாவியுங்கள்

**போர்ஹான்ஸ்**

பற்பசை





புகழ்பெற்ற பல் வைத்தியர் ஒருவரின் தனித் தயாரிப்பு முறைக்கு தயாரிக்கப்பட்டது. இதில் ஈறுகளை காக்கும் விசேட மருந்துகள் சேர்க்கப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### "ஹமீதியா ஹோட்டல்"

சகல வித உணவுகளுக்கும் சிற்றுண்டி, தேநீருக்கும் மிகச் சிறந்த இடம். ஓர் முறை பரீட்சித்துப் பாருங்கள். உண்மை விளங்கும். திறமான புரியாணிக்கு விஜயம் செய்யுங்கள். சிங்களம், தமிழ், ஆங்கிலம்முதலான சகலபுதினப்பத்திரிகைகளும் நம்மிடம் தினமும் பெற்றுக் கொள்ளலாம். "ஈழநாடு" பத்திரிகையும் சுவீப் டிக்கற்றுகளும் எம்மிடம் தினமும் பெற்றுக் கொள்ளலாம். படித்துப் பயனடையுங்கள்.

முகாமையாளர்,
"ஹமீதியாஹோட்டல்",
பாஸிசயிற்,
269 அனுராதபுரம்


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**ஞாயிறு 1-10-67**

344 மீற்றர் & 61 மீற்றர்

**காலை** 6-30 நாதாஞ்சலி 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல் வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 எங்கள் அதிதி.

இரவு 6-15 நாடோடிப் பாடல்கள், 6-45 கிறிஸ்தவ ஆராதனை, 7-15 பாட்டு — வி. நடேசன், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 மாதர் கேட்டவை.

### வருடாந்தப்பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வண்ணார்பண்ணை நாவலர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க வருடாந்தப்பொதுக் கூட்டம் திரு.ஒஸ். பரம்தில்லைராசா தலைமையில் நாவலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசிய சங்கச் செயலாளர் திரு.வ. கந்தசாமி பல வருடங்களாக இப்பகுதியில் கூட்டுறவுச் சங்கமில்லாத குறை நீக்கப்படுவதற்குக் கடந்த வருடம் பொது மக்கள் முன்வந்ததைப் பாராட்டினர். கூட்டுறவுப் பரிசோதகர் திரு.ரி.நடராசா எண் பார்வை அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

கூப்பன் எடுக்கும் ஒவ்வொரு குடும்பத்தினரையும் சங்கத்தில் அங்கத்தவராகச் சேர்க்க முயற்சிப்பதெனவும் நெசவு நிலையமொன்றை ஆரம்பித்து நடத்துவதெனவும்தீர்மானிக்கப்பட்டது. திரு.மு.க. இரத்தினவேலுப்பிள்ளை நன்றி கூறினர்.

திருவாளர்கள் எஸ். சின்னக்கண்ணுப் பிள்ளை, ஆ. சண்முகராஜா, ரி.என். இரகுநாதன் ஆகியோர் புதிய நிர்வாக அங்கத்தவர்களாகத் தெரியப்பட்டனர்.

### வருடாந்தப் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

கொக்குவில் இந்துக்கல்லூரி வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று மாலை மேற்படி பாடசாலை மண்டபத்தில் நடைபெற இருக்கிறது. கௌரவ நீதியரசர் திரு.வி.சிவசுப்பிரமணியம் இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுவார். திருமதி. சிவசுப்பிரமணியம் பரிசில்களை வழங்குவார்

## தமது அங்கத்தவரை தமக் கெதிராகப் பாவித்தனராம்

### நல்லூர் தெற்கு ச. ச. நிலையம் ஆட்சேபம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நல்லூர் தெற்கு சனசமூக நிலையம் தமது நிலையத்தில் அங்கத்துவம் வகித்துவரும் ஒரு சில வாலிபர்களை யாழ். நிலைய விளையாட்டரங்கில் நடைபெற்ற யாழ்ப்பாண சனசமூக நிலையங்களின் விளையாட்டுப் போட்டியில், அரியாலை சனசமூக நிலையம் தனது கோஷ்டியில் சேர்த்துக் கொண்டதாக அரியாலை சனசமூக நிலையமீது நல்லூர் தெற்கு சனசமூக நிலையம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

"யாழ்ப்பாண சனசமூக நிலையங்களின் விளையாட்டுப் போட்டியில் நாம் கலந்து கொள்ளும் அதே போட்டியில் அரியாலை சனசமூகநிலையம் எமது சனசமூக நிலையத்தில் பல வருடங்களாக அங்கத்துவம் வகித்துவரும் விளையாட்டு வீரர்களை தமது கோஷ்டியில் சேர்த்து எமக்கு எதிராகப் போட்டியில் கலந்துகொள்ள வைத்தது முறையற்ற செய்கை எனக் கூறும்ஆட்சேபக் கடிதத்தை நல்லூர்தெற்குசனசமூகநிலையம் யாழ்ப்பாண சனசமூக நிலையங்களின் விளையாட்டுச் சங்கக் காரியதரிசியிடம் கொடுத்துள்ளது. [வி.நி]

## இன்று கருத்தரங்கு

சங்கானை, சனி

உருளைக்கிழங்குச்செய்கை பற்றிய கருத்தரங்கு ஒன்று நாளை பிற்பகல் சித்தன்கேணி கணேசவித்தியாசாலை மண்டபத்தில் திரு. எம்.கே. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவிருக்கிறது. இக் கருத்தரங்கில் சகல அரசாங்க இலாகாகளிலுமுள்ள அதிகாரிகளும் பங்குபற்றுவர். யாழ். மாவட்ட கிருஷிக அதிபர் திரு. கே. என். ஜெயசீலனும் வலி. மேற்குக் காரியாதிகாரி திரு. என். மாணிக்க நடராசாவும் இதில் உரையாற்றுவர். தொடர்ந்து மாலையில் இளவாலை ஆண்கள் தமிழ்ப் பாடசாலையிலும் மானிப்பாய் பட்டினசபை முன்றலிலும் கருத்தரங்குகள் நடைபெறும்.

## வியட்னமில்...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

பதாக ஜனாதிபதி ஜோன்சன் மேலும் கூறினர்.

ஆனல், பேச்சுவார்த்தைகள் நடைபெறும் போது, அமெரிக்கா நிறுத்திவைக்கும் விமான, கடற்படைத் தாக்குதலை வட வியட்னம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயலக்கூடாது என ஜனாதிபதி ஜோன்சன் கேட்டுக்கொண்டார்.

**பாப்பரசர் கடிதம்**

இதற்கிடையில், பாப்பரசர் போல், வத்திக்கானிலிருந்து ஐ. நா. பொதுக்காரியதரிசி யூதாண்டுக்கு அனுப்பியுள்ள ஒரு கடிதத்தில், வியட்னமில் அமைதி காண்பதற்கான முயற்சியில், யூதாண்டுக்குத் தமது உதவியை அளிக்க முன்வந்துள்ளார்.

பாப்பரசர் போப்பின் கடிதத்தின் விபரங்கள், நேற்றிரவு ஐ. நா. தலைமைக் காரியாலயத்தில் வெளியிடப்பட்டன.

வியட்னமில் அமைதி ஏற்படுவதற்கான சமாதானத் திட்டங்கள் இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தாம் நம்புவதாகத் தெரிவித்த பாப்பரசர், யூதாண்டின் முயற்சிகளைப் பாராட்டினர்.

வியட்னம் போரை நிறுத்துவதற்கு யூதாண் எடுக்கும் எந்த முயற்சிக்கும் தாம் உதவத் தயாராயிருப்பதாகப் பாப்பரசர் போல், யூதாண்டுக்குத் தாம் எழுதியுள்ள கடிதத்தில் உறுதியளித்துள்ளார்.

## பொலிசாருக்கு மேலும் தவணை

யாழ்ப்பாணம், ஞாயிறு

கலவரத்தைத் தூண்டும் வகையில் அச்சடிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் துண்டுப் பிரசுரங்களுடன் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் கைதுசெய்யப்பட்ட சிவதாசன் மீது வழக்குத் தாக்கல் செய்ய பொலிஸார் மீண்டும் தவணை கோரியுள்ளனர்.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. எம். ஜமீல் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது இது சம்பந்தமாக வழக்குத் தாக்கல் செய்ய தாம் அட்டோர்ணி ஜெனரலிடம் ஆலோசனை கோரியுள்ளதால் மேலும் தவணை தருமாறு பொலிஸார் கேட்டதன் பேரில் மாஜிஸ்டிரேட் அடுத்த மாதம் 10-ம் திகதி வரை அவகாசம் கொடுத்தார். [ந. நி]


## வரிவிளமபரம்

### தேவை

**மனேஜர்**

யாழ்ப்பாணத்தில் ஒரு பிரபலமான படமாளிகை ஒன்றில் கடமையாற்ற அனுபவமுள்ளமனேஜர் தேவை. ஆங்கிலம் நன்கு தெரிந்தவராகவும், பிணைப்பணம் கட்டக்கூடியவராகவும் இருத்தல்வேண்டும். விரும்புவோர் 5-10-67 க்கு முன் விளம்பர இல. 2394 மே/பா 'ஈழநாடு', த.பெ. எண். 49, யாழ்ப்பாணம் என்றவிலாசத்திற்குஎழுத்து மூலம் விண்ணப்பிக்கவும்.

**தையல் வேலை தெரிந்த பெண்கள்:**

சேலைகளுக்கு குஞ்சம் (டசல்ஸ்) இணைக்கவும், தையல் வேலையில் நல்ல அனுபவமுள்ள பெண்கள் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். த. சங்கரப்பிள்ளை பிறதர்ஸ், 149 காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 2205

**உத்தியோகஸ்தர்கள்:**

நாடு முழுவதிலும் பொது ஜனத் தொடர்பு உத்தியோகத்தர்கள் தேவை. தகுதியுடைய இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம். நல்ல ஊதியம் கிடைக்கும். (Shannas) ஷனஸ், 27, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 2400

### விற்பனைக்கு

நெசவாளருக்குத் தேவையான கைத்தறிகளும், பாவோடும் ரோலரும் திறமையான முறையில் ஆடருக்கு குறித்த தவணையில் செய்து விற்பனைக்குக்கொடுக்கப்படும். தேவையானவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும். இ. பழநி, நிர். 93 மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம். 2399

**கடைக்கட்டிடம்:**

சுன்னாகம் பட்டணத்தில் கே. கே. எஸ். வீதியில் வலிகாமம் வடக்கு யூனியனுக்கு முன்பாக இருக்கும் எனக்குச் சொந்தமான கடைக் கட்டிடம் விற்பனைக்கு உண்டு. மின்சார வசதியும் உண்டு. விபரங்கட்கு: எஸ். அல்பிறெட், சேர்ச் வீதி, மல்லாகம். 2396

**எஞ்சின்:**

நல்ல நிலையில் உள்ள 16 குதிரைப்பலம் கொண்ட றஸ்ரன் எஞ்சின் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு நேரில் வரவும். கொழும்பு சிமோல் இன்டஸ்றீஸ், 223, பருத்தித்துறை ரோட், நல்லூர், யாழ்ப்பாணம். (முத்திரைச் சந்தை). 2206



# கடுகதி பஸ் ஓட்டும் பஸ் சாரதி இவர்






குறித்த காலத்துக்குள்ளே குறித்த இடத்தினைப் போய்ச் சேரத் தக்கபடி, விழிப்பாய் இருந்து பஸ் ஓட்டவேண்டியவர் இவர். பஸ்ஸில் பிரயாணம் செய்யும் பிரயாணிகளின் உயிர்களெல்லாம் இவர் கையிலேதான் இருக்கின்றன அபாயம் எதுவும் நேரிடாமல் அவ்வளவு பேரையும் கவனமாகவும் பாதுகாப்பாகவும் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டியவர் இவர். இவருடைய வேலை எவ்வளவு கடினமானது.

ஓயாது உழைப்பவர்கள், முயற்சியால் உயர்ந்தவர்கள், முன்னேறிச் செல்பவர்கள் எல்லோரும் — மணத்துக்கும் குணத்துக்குமாக — எப்பொழுதும் விரும்பிப் புகைப்பது 5 டயமண்ட் சிகறெற்.

## இவரும் புகைப்பது 5 டயமண்ட் சிகறெற்

1/67 AJNS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வியட்னமில் சீன தலையிடுவதை ஐ. நா. மறுக்க முடியாது'

## சீனப் பிரதமர் சூ-என்-லாய்



பீகிங், செப். 30

வியட்னமில் சீன தலையிடக்கூடாது என்றுகூற ஐ. நா. நாவுக்கு எவ்வித உரிமையும் கிடையாதென்று சீனப்பிரதமர் திரு. சூ என் லாய் தெரிவித்துள்ளார்.

சீனவுக்கு விஜயஞ் செய்துள்ள வடவியட்னம் தூதுக் கோஷ்டி ஒன்றுக்கு அளிக்கப்பட்ட வரவேற்புபசாரத்திலே பேசுகையிலேயே பிரதமர் சூ என் லாய் இவ்வாறு கூறினர்.

வியட்னம் போருக்கு வடவியட்னம், வியட்காங் அளித்துள்ள சமாதானத் திட்டங்களின் அடிப்படையிலேயே, தீர்வுகாண முடியுமென திரு. சூ என் லாய் மேலும் கூறினர்.

'அமெரிக்காவின் சமாதானப் பேச்சுவார்த்தைகள் என்பது வெறும் ஏமாற்றுத் திட்டமே' என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், வடவியட்னம் பிரதமர் திரு. தான் நீம், அமெரிக்கா தனது குண்டுவீச்சினல் வடவியட்னமைப் பயமுறுத்த முடியாதென்று கூறியுள்ளார். அதேவேளையில் அமெரிக்காவின் சமாதானத் திட்டமெதுவையும் ஏற்றுக் கொள்ள முடியாதென்றும் அவர் கூறினர்.

## தோட்டை கழற்றினராம்

சுழிபுரம், சனி

சித்தங்கேணிச் சந்தியில் வைத்து இளம் வாலிபர் ஒருவர், பகல் நேரத்தில் ஒரு இளம் பெண்ணின் காதில் இருந்த தோட்டைக் கழற்றிக் கொண்டு ஓட முற்படுகையில் பொலிசாரிடம் பிடித்து ஒப்படைக்கப்பட்டுள்ளார். பொலிசார் இவ்வாலிபர் மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

## திருட்டு

புன்னலைக்கட்டுவன், சனி

ரூபா 3000 பெறுமதியான சேலைகள், நகைகள் ஆகிய பொருட்கள் ஊரெழுவில் உள்ள ஒரு வீட்டில் களவு போயுள்ளதாக சுன்னுகம் பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் நடந்த இரவு அக்குடும்பத்தவர் வீட்டிலேயே இருந்ததாகத் தெரிகிறது. பொலிசார் புலன் விசாரணை செய்கின்றனர்.

## ஹாக்கி போட்டி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணப் பாடசாலைகளின் கூட்டுக்கோஷ்டியினருக்கும் புதுடில்லி பால்மென்டல் கோஷ்டியினருக்கும் இடையே இன்றுமாலை ஹாக்கிப்போட்டியொன்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [வி. நி.]

## எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், ஞாயிறு

பொன்னலையை சேர்ந்த சின்னத்தம்பி சிவராசா என்பவர், அதே ஊரைச் சேர்ந்த எஸ். வயிரவன் என்பவரை கத்தியால் குத்தி படுகாயம் விளைவித்ததாக சங்கானை பொலிஸாரால் குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கு நேற்றுக் காலை மல்லாகப் மாஜிஸ்திரேட் திரு. நெதசிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரிசா பில் புறக்டர் ஏ. அன்ரனி ஆஜரானர். விசாரணையின் பின் மாஜிஸ்திரேட் எதிரியை விடுதலை செய்தார்.

## பெற்றார் . . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யாதிகாரியைச் சந்தித்து ஆட்சேபம் தெரிவிக்கவிருக்கின்றது.

இதற்கெல்லாம் காரணம் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி அதிபர் திரு. ரி. அருள்சுந்தரம் இடமாற்றம் செய்யப்பட்டிருப்பது தான். கல்லூரியின் மேன்மைக்காக அயராது உழைத்து மாணவர்களின் உயர்வுக்கு பல வழிகளிலும் பாடுபட்ட கல்லூரி அதிபர் மேற்கொண்ட நன்முயற்சிகள் முற்றுப்பெருத நிலையில் திடீரென்று இடமாற்றம் செய்யப்பட்டிருப்பது குறித்து பலரும் கவலையும் அதிருப்தியும் கொண்டிருக்கிறார்கள்,

## வண்ணைவேங்கடேசர் உற்சவம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வண்ணை ஸ்ரீ வேங்கடேசப் பெருமான் வருடாந்த உற்சவம் எதிர்வரும் 3-ம் திகதி ஆரம்பமாகிறது. உற்சவம் தொடர்ந்து நடைபெற்று 11-ம் திகதி ரதோற்சவமும், 12-ம் திகதி தீர்த்த விழாவும் நிகழும்.

## தென்கிழக்காசிய

1-ம் பக்கத் தொடர்ச்சி

ர்ந்து இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளனர் பிரதமர் விரைவில் மலேஸியா செல்ல விருப்பதாலும் அங்கு அவர் தென்கிழக்காசிய கூட்டமைப்பில் சேர்வது பற்றி பேச்சுவார்த்தைகள் நடத்தக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கை அந்தக்கூட்டமைப்பில் சேருவதானல் மண்டலசார்பற்ற கொள்கையிலிருந்து மீறுவதாக முடியும். ஏனென்றல் அந்த அமைப்பு 'சியாட்டோ' ஒப்பந்த நாடுகளின் ஒரு ரகசிய அங்கமாகவே இருக்கின்றது அதன் இரண்டு அங்கத்துவ நாடுகளான பிலிப்பைன்ஸ், தாய்லாந்து ஆகியவை சியாட்டோவில் அங்கம் வகிக்கின்றன.

மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் பிரிட்டிஷ் ராணுவத்தளங்கள் இன்னும் இருக்கின்றன. தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டு அமைப்பு சிலர் நினைப்பதுபோல் பொருளாதார அமைப்பு அல்ல. அது சீனவுக்கு எதிரானது என்று ஏற்கனவே மலேஸிய பிரதமர் தெரிவித்திருக்கிறர். இந்தநிலைமையில் இலங்கை அதில் சேர்வதென்பது நினைக்கமுடியாதவொன்று என்று எதிர்க்கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

## கடல்எல்லையை இந்தியா விஸ்தரித்தது

புதுடில்லி, செப். 30

இன்று நள்ளிரவு முதல் இந்தியா தனது கடல் பிராந்திய எல்லையை 6 மைல் தொலைவிலிருந்து 12 மைலாக விஸ்தரித்துக்கொண்டது.

எல்லா ஜனநாயக சோஷலிஸ நாடுகளும் தமது கடல் எல்லையை 12 மைலாக விஸ்தரித்துக்கொள்வது வழக்கம் என்று அறியப்படுகின்றது.

## சுயபாஷா...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சார உதவி அமைச்சர் திரு. காமினி ஜெயசூரியா, பேராசிரியர் வி. செல்வநாயகம் ஆகியோர் உரைநிகழ்த்துவர்.

கூட்டத்தில் சமர்ப்பக்கப்படவிருக்கும் மற்றும் சில முக்கிய பிரேரணைகள் வருமாறு:-

கணவன் ஆரசாங்க சேவையிலில்லாத ஆசிரியைகளின் பிள்ளைகளுக்கு அநாதைப் பென்ஷன் வசதிசெய்யப்படவேண்டும்.

ஆசிரியர் இடமாற்றச் சபைகளில் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுக்கு மீண்டும் இடமளித்தல் வேண்டும்.

பண்டிதர், வித்துவான், சைவப்புலவர், கத்தோலிக்க டிப்புளோமா ஆகியோரை பட்டதாரிகளாக அங்கீகரித்துச் சம்பளம் வழங்கவேண்டும்.

ஆசியர்களுக்கு அரசியலுரிமைவேண்டும்.

மட்டக்களப்பைச் சேர்ந்த கரடியனறு விவசாயப் பாடசாலையை மீண்டும் திறக்க வேண்டும்.

# நாவலர் சந்தி கொலை வழக்கு.....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வால்டன், புறக்டர்களான ஆர். விஸ்வநாதன், கே. பரமசிவம்பிள்ளை ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர். 3-ம் எதிரி சார்பில் அட்வக்கேட் எம். தேவசகாயம் ஆஜரானர்.

கடை முதலாளி மகேந்திரன் கூறியதாவது:

சர்மாவிடம் என்ன நடந்தது என்று கேட்டேன். காரில் வந்து இரத்தினமும், சண்முகமும் சுட்டுப்போட்டார்கள் என்று அவர் கூறினர். அங்கு நின்ற கூட்டத்தில் ஒருவரிடம் பொலிஸுக்கு போன் பண்ணும்படி கூறிவிட்டு, தெய்வேந்திரத்தின் தாயாரிடம் அறிவிக்கச் சென்றேன். குலசிங்கம் அதிர்ச்சியடைந்து நின்றர். நான் அவருடன் கதைக்கவில்லை. தெய்வேந்திரம் சுடப்பட்டது அபசகுனம் எனக் கருதியதால் கடையை மூடிவிட்டேன். அதன்பின் வியாபாரமும் நன்கு நடக்கவில்லை. பயத்தினல் எவரும் கடைக்கு கார் கொண்டுவருவதில்லை.

அட்வக்கேட் ஏட்லி பெரேரா குறுக்குவிசாரணை செய்கையில் சாட்சி கூறியதாவது:

முருகேசு அம்பலவாணரை நாங்கள் அம்பலம் என்று அழைப்போம். பொலிஸுக்கு போன் பண்ணும்படி அவரிடம் கூறியதாக எனக்கு ஞாபகமில்லை. அவர் எனது கடைக்கு வருவார். என்னுடன் கதைப்பது வழக்கம்.

வழ: நீர் சொல்லிவிட்ட ஆள் யார் என்று அறிய முயற்சி எடுக்கவில்லையா?- இல்லை.

வழ: கீழ் கோர்ட்டில் அம்பலவாணர் சாட்சியமளித்தாரா?- ஞாபகமில்லை.

வழ: உமது கடையில் ஒருவர் சுடப்பட்டதால் அக்கறை எடுத்தீரா?-இல்லை.

வழ: ஏன்?- கோர்ட்டிற்குப் போவதானல் அன்று கடையைப் பூட்டவேண்டும். அத்துடன் எனக்கு சுகமில்லை.

வழ: விசாரணை பற்றி சர்மா வந்து சொல்வாரா?- ஆம்.

வழ: கீழ்க்கோர்ட்டில் அம்பலவாணர், நீர் சொல்லித்தான், பொலிஸுக்கு தான் தகவல் கொடுத்ததாக கூறியுள்ளார்?- ஞாபகமில்லை.

வழ: பொலிஸுக்கு அறிவிக்கும்படி எப்படி கூறினீர்?- தெய்வேந்திரம் சுடப்பட்டுக்கிடக்கிறர் என்று.

வழ: யார் சுட்டதென்று நீர் சொல்லிவிடவில்லை?- ஞாபகமில்லை.

வழ: கார் நம்பர் சொல்லவில்லை?- ஞாபகமில்லை.

வழ: நீர் குலசிங்கத்திற்கு சரியான பயம்?- அப்படியில்லை.

வழ: நீர் விஷமத்திற்காக பொய் சாட்சி சொல்கிறீர்?- உண்மையை கூறுகிறேன்.

வழ: தெய்வேந்திரம் இறந்தது பற்றி நீர் ஆத்திரப்படவில்லையா?- ஆத்திரப்படவில்லை, அனுதாபப்பட்டேன், கவலைப்பட்டேன்.

வழ: வெடிச்சத்தம் கேட்டுவந்து சர்மாவிடம் என்ன நடந்தது எனக் கேட்டீர்? -ஆம்.

வழ: தெய்வேந்திரம் சுடப்பட்டார் என சர்மா சொன்னர்?- இரத்தினமும் சண்முகமும் காரில் வந்து சுட்டு விட்டுப்போனதாகக் கூறினர்.

வழ; அது பச்சைப்பொய்? -உண்மையைக்கூறுகிறேன்.

வழ: யாரோ காரில்வந்து சுட்டுப்போட்டுப் போனதாக சர்மா கூறினர்?-நான் மறுக்கிறேன்.

ஜூரி: சர்மா உம்மிடம் யார் காரை ஓட்டி வந்ததாகச்சொன்னரா?- இறைவர் ஓட்டி வந்ததாகச் சொன்னர்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

2-வது ஜனத்திரள் வாரம்!

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] பிளாஸா [வெள்ளவத்தை]

தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு

விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிஷ்ண [திருமலை]

தினசரி பி. ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு

இன்று முதல்!

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு

ராஜ் [நீர்கொழும்பு]

மற்றும் 4 திரைகளில்!

தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி ஜனதிபதியின் பரிசு பெற்று அநேகரின் பாராட்டையும் பெற்ற உணர்ச்சியூட்டும் சித்திரம்!

ஜெய்சங்கர் - நாகேஷ் - சுந்தரராஜன்



ஜமுன - ஷோபா - ஜி. வரலக்ஷ்மி

பேபி பத்மினி இருவேடங்களில் நடித்த

ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ்

குழந்தையும் தெய்வமும்

டைரக்ஷன்: கிருஷ்ணன் பஞ்சு

இசை: எம். எஸ். விஸ்வநாதன்

REGAL JAFFNA

Time: 4-45 7-00 p. m. 9-45 p. m.

Ian Hendry
Janette Scott
in
THE BEAUTY JUNGLE

நியூ காலிங்கன் [இணுவில்]

தினசரி 6-30, 9-30 மணி

விடுமுறைதினங்களில் 2-30

ஜெமினி சரோஜாதேவி நடித்த

வாழவைத்த தெய்வம்

மனோஹரா [யாழ்ப்பாணம்]

Roger Hanin
Margaret Lee
in
AN ORCHID FOR A TIGER
A Secret Agent Film
in Color

ராஜா RAJAH

யாழ்ப்பாணம் JAFFNA.

Daily at 4-45, 7-00 & 9-45

THE SPY WHO CAME IN FROM THE COLD

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org